hallo–
glarus.ch

kanton glarus

Glarus மாநிலம்

குறுகிய விவரணம்
அரசியல் அமைப்பு
மதம்
ஓய்வு நேரம்

குறுகிய விவரணம்

Glarus மாநிலம் சுவிலிலுள்ள 26 மாநிலங்களில் (உறுப்பினர் மாநநிலத்தில்) ஒன்றாகும். கிளாருஸ் மாநிலத்தை உருவாக்கும் இரண்டு பள்ளத்தாக்குகளை உயர்ந்த மலைகள் சூழ்ந்துள்ளன. கிராமப்புறம் Glarus மாநிலத்தின் தனித்துவமாகும் (Landsgemeinde). வாக்களிக்கும் உரிமை உள்ளவர்கள் வருடத்திற்கு ஒரு முறை அரசியல் முடிவுகளை எடுப்பதற்காக, திறந்தவெளியில் ஒன்றாகச் சந்திக்கின்றனர்.

எண்ணிக்கைகளும் உண்மைகளும்

Glarus மாநிலத்தில் 40'000 குடியிருப்பாளர்களில் கிட்டத்தட்ட கால்பாகம் வெளிநாட்டவர்கள். 685 சதுர கி.மீ பரப்பளவுள்ள இந்த மாநிலம் மூன்று கிராமசபைகளைக் (Gemeinden) கொண்டுள்ளது: Glarus Nord, Glarus மற்றும் Glarus Süd. தலைநகரம் Glarus ஆகும். அரசமொழி டொச்.

வரலாறு

Glarus மாநிலம் 1352ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டங்களுக்குப் பின் உருவாக்கப்பட்டது. தரிசு நிலப்பரப்பு மாநிலத்தை வடிவமைத்தது. ஆல்பைன் பொருளாதாரத்தால் குடிமக்களுக்கு உணவளிக்க முடியாததால், 1500 மற்றும் 1800 க்கு இடைப்பட்ட காலத்தில் கிளாருஸ்-ஐச் சேர்ந்த பல இளைஞர்கள் வெளிநாட்டில் கூலிப்படையாக வேலை செய்தனர். 16 ஆம் நூற்றாண்டில் வர்த்தகம் (Schiefertische) வளர்ந்தது, 18 ஆம் நூற்றாண்டில் ஜவுளித் தொழில் மாநிலத்தை பொருளாதார மலர்ச்சிக்கு இட்டுச் சென்றது. இது சுவிட்சர்லாந்திற்கு, முன்னர் அறிந்திராத சமூக உரிமைகளை அறிமுகப்படுத்தப்படுவதற்கும் வழிவகுத்தது. இன்றுவரை, Glarus மாநிலம் சுவிட்சர்லாந்தில் அதிக தொழில்மயமாக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாகும்.

சம்பிரதாயமும் பாரம்பரியமும்

Glarus மாநிலத்தில் உள்ள சில சம்பிரதாயங்களும் பாரம்பரியங்களும் நீண்ட வரலாற்றை திரும்பிப்பார்க்க உதவுகின்றன. எடுத்துக்காட்டாக, 1835 முதல், நெஃபெல்ஸ் நினைவுநாளன்று (Näfelserfahrt) நெஃபெல்ஸ் போரில் இறந்தவர்களை (1388) நினைவு கூர்கிறது. ஆண்டுதோறும் ஆல்ப்ஸ் ஏறுதல் (Alpaufzüge) மற்றும் ஆல்ப்ஸ் இறங்குதல் (Alpabzüge) பண்டிகைகள் மூலம் ஆல்ப்ஸ் மலையில் கால்நடைகளை மேய விட்டு கோடைகாலம் வரை கொண்டாடுகின்றனர். மாட்டு மணிகளை இளைஞர்கள் ஆண்டு இறுதியில் மணி அடிக்க பயன்படுத்துகிறார்கள்.

Glarus – "Zigerschlitz"

கிளாரஸின் மாநிலம் நகைச்சுவையாக "Zigerschlitz" என்றும் அழைக்கப்படுகிறது. ஒருபுறம் குறுகிய பள்ளத்தாக்கு ஒரு "பிளவை" (Schlitz) உருவாக்குகிறது, மறுபுறம் உலகின் தனித்துவமான ஒரு வகையான பாலாடைக்கட்டி ஜிகர்(Ziger) 1463 முதல் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-glarus.ch/ta/canton-glarus/brief-portrait

அரசியல் அமைப்பு

சுவிஸ் அரசியல் நிலை 3 தலைப்புகளாக இருக்கின்றன: மத்தியஅரசு, மாநிலம் (உறுப்பினர் மாநிலங்கள்) மற்றும் கிராமசபைகள். சுவிஸ்பிரசைகள் தமது அரசியல் நிலைகளை வாக்களிப்தன் மூலம் தீர்மானிப்பர்.

சுவிஸ் மத்திய அரசு

சுவிஸ் இணைந்தநாடானது (Bund) 1848 ஆண்டிலிருந்துள்ளது. தலைநகரம் பேர்ண். சுவிஸ் இனரீதியாக, மொழி மற்றும் சமயரீதியாக ஒன்றையே கொண்டிருக்கவில்லை. வேவ்வேறு கலாச்சாரங்கள் சுயாதீனமாக பிணைந்திருப்பதன் காரணமாக "விருப்பமான தேசியம்" (Willensnation) ஆக கூறப்படுகிறது. சுவிஸ் சர்வதேச அரசியல் ரீதியாக நடுநிலையைப்பேணி வருகிறது.

கூட்டாட்சித்தத்துவம்

சுவிஸ் மாநிலங்கள் மற்றும் கிராமசபைகள் என்பன பெரும்பாலும் சுயாதீனமானவை, இதை ஒரு கூட்டாட்சித்தத்துவம் எனலாம். 26 மாநிலங்கள் மற்றும் 2000ற்கு மேற்பட்ட கிராமசபைகள் என்பன முற்றாக அரசின் சட்டதிட்டங்களுட்பட்டவையாக உள்ளன. Glarus மாநிலம் சொந்தமான அரசியல்அடிப்படையையும் அரசையும், ஒரு பாராளுமன்றத்தையும் ஒரு நீதிமன்றத்தையும் கொண்டிருக்கின்றது. பெரும்பாலான அரசின் நடைமுறைகளுக்கு மாநிலம் அல்லது கிராமசபையே பொறுப்பாயுள்ளன. இதனால் உதாரணமாக பாடசாலை நடைமுறை மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசமான முறையில் வரையறுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் சட்டங்கள் நாடு முழுவதற்கும் செல்லுபடியாகும்போது, மாநிலத்தால் உருவாக்கப்படும் சட்டம் அம்மாநில பிரதேசத்திற்கு மட்டுமே பொருந்தக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு செயற்பாடுகளும் மாநிலம், கிராமசபை மற்றும் மத்திய அரசையும் தொடர்புபடுத்துவதாகவே இருக்கும்.

அதிகாரப்பிரிப்பு

அதிகாரம் குவிவதை தடுக்குமுகமாக அரசானது சுவிஸ் மற்றும் மாநிலங்களில் மூன்று சுயாதீனமான தெரிவுகளைப் பிரித்துவைத்துள்ளது : சட்டமன்றம் (சட்டமன்ற அதிகாரம்), நிர்வாகம் (சட்டத்தை நிறைவேற்றும் அதிகாரம்) மற்றும் நீதித்துறை (நீதித்துறை அதிகாரம்). Glarus மாநிலத்தில் பின்வரும் அதிகாரிகள் இந்தப் பணிகளை மேற்கொள்கின்றனர்: கிராமசபை மற்றும் மாவட்ட நிர்வாகி (60 உறுப்பினர்கள், நான்கு வருடங்களுக்கு ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்); நிர்வாகக்குழு: ஆளும் குழு (5 உறுப்பினர்கள், நான்கு வருடங்களுக்கு ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்); நீதித்துறை: மாநில அளவில் பல்வேறு நீதிமன்றங்கள். அத்துடன் கிராமசபைகளிலும் சட்டசபைகள் (கிராமசபைக்கூட்டங்கள் (Gemeindeversammlung)), மற்றும் ஒரு நிர்வாகி (கிராமசபைபிரதிநிதி (Gemeinderat)) என்பன காணப்படுகின்றன. மத்திய நிர்வாக ரீதியில் சட்டமன்றம் 2 சபைகளைக் கொண்டுள்ளது: தேசிய மற்றும் மாநில பிரதிநிதிகள் (National- und Ständerat). தேசிய அரசு (7 அங்கத்தவர்கள்) என்பது மத்திய அமைச்சர்கள் (Bundesrat). அத்துடன் தேசியரீதியிலும் வேறுவேறான நீதிமன்றங்கள் உள்ளன. உச்சநீதிமன்றமானது மிகவும் உயர்ந்தநிலையில் இருப்பதுடன் உதாரணமாக மாநில நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை மீளாய்வுக்கு தொடர்ந்து ஆராய அனுப்பக்கூடியதாக இருக்கிறது.

ஜனநாயக உரிமைகள்

சுவிஸ் பிரஜைகள் தெரிவு - மற்றும் வாக்களிப்புக்கு தகுதி பெற்றவர்களாயுள்ளனர். அவர்கள் கிராமசபை, மாநில மற்றும் தேசிய மட்டத்தில் அரசியல் தீர்மானங்களை தெரிவு செய்யவும் அத்துடன் தாமாகவே தெரிவு செய்வதற்காக முன்வைக்கவும் முடியும். அத்துடன் பிரசைகள் கிராம, மாநில மற்றம் தேசிய ரீதியான அரசியல் நடைமுறைகளை தெரிவு செய்யமுடியும்.(நேரடியான உரிமை). சர்வசபை வாக்கெடுப்பு மூலம் மக்களால் தமது சொந்த விருப்புகளை வாக்கெடுப்புக்கு உள்ளாக்கலாம். Glarus மாநிலத்தில் வாழும் வெளிநாட்டினருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை. அவர்கள் தமது அரசியல் விருப்புகளை வேண்டுகோள் மூலம் நிர்வாகங்களிடம் சமர்ப்பிக்கலாம். கூடுதலாக கமிஷன்கள், ஆர்வமுள்ள குழுக்கள் (Interessensverbänden) அல்லது வசிப்பிட சங்கங்களில் (Vereinen am Wohnort) ஈடுபட வாய்ப்பு உள்ளது.

அடிப்படை உரிமை

அதிகூடிய அடிப்படைச்சட்டக் கொள்கைகள் சுவிஸின் கூட்டாட்சி அரசியலமைப்பில் (Bundesverfassung) உறுதி செய்யப்பட்டுள்ளது. கூட்டாட்சி அரசியியலமைப்பின் ஒரு முக்கியமானதாக ஐரோப்பிய மனித உரிமைகள் தொடர்பான மாநாட்டில் (EMRK) எடுக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் அமைகின்றன. இவை மனிதனின் இருப்புகளைப் (உதாரணத்திற்கு வாழ்க்கைக்கான உரிமை, அவசர நிலையில் உதவிக்கான உரிமை) பாதுகாப்பதுடன் மற்றும் தனிப்பட்டவர்களுக்கெதிரான அரச வன்முறை அல்லது பெரும்பான்மையோருக்கு எதிரான குழுக்களின் வன்முறைகள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கிறது. எவருக்கும் அவர்களின் பிறப்பிடம், இனம், மதம், பாலினம் அல்லது பாலியல் போக்கிற்குப் பாரபட்சம் காட்டக்கூடாது என்பதை உத்தரவாதம் செய்கிறது. Glarus மாநிலத்தில் இனப்பாகுபாட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச ஆதரவு மற்றும் ஆலோசனை வழங்கப்படுகிறது. சுவிஸில் சமயம், கருத்து வெளியிடுதல், மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் உள்ளன.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-glarus.ch/ta/canton-glarus/political-system

மதம்

சுவிஸ் ஒரு பாரம்பரிய கிறிஸ்தவ நாடு. ஆயினும் இன்று பல வேறு மதங்களைச் சேர்ந்த அதிக மக்கள் சுவிஸில் வாழுகிறார்கள். மதச் சுதந்திரம் உறுதிப்படுத்தப் பட்டிருப்பதுடன் அரச பாடசாலைகள் மதச் சார்பற்றவை.

மதமும் அரசும்

சுவிஸ் பாரம்பரியமான கிறிஸ்தவ நாடாகும். மாநிலங்களே மதம் மற்றும் மாநிலத்திற்கான தொடர்புகளை தீர்மானிக்கும். பெரும்பாலான டொச் மாநிலங்கள், Glarus மாநிலம் உட்பட,- கிறிஸ்தவ சமயகூட்டமைப்பை பகிரங்க சட்டபூர்வ நிறுவனங்களாக (தேவாலயங்கள், Landeskirchen) அங்கீகரத்துள்ளன. இதன் கருத்து மாநிலம் இவற்றிற்கு குறிப்பிட்ட உரிமைகளைக் கொடுத்துள்ளது. இதன்மூலம் உதாரணமாக தமது அங்கத்தவரிடமிருந்துவரியைப் பெற்றுக்கொள்ளலாம். Glarus மாநிலத்தில் றோமன் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மற்றும் கிறிஸ்தவ கத்தோலிக்க தேவாலயங்கள் உள்ளன.

Glarus மாநிலத்தில் மத சமூகங்கள்

Glarus மாநிலத்தில் பொதுவான சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட மதச் சமூகங்கள் (தேவாலயங்கள் (Landeskirchen)) தவிர மிகவும் மாறுபட்ட நம்பிக்கைகள் கொண்ட ஏராளமான பல மதச் சமூகங்கள் உள்ளன. பெரும்பாலான Glarus மக்கள் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள். இருப்பினும், கடந்த வருடங்களில், மற்ற மதங்களைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. மேலும் தாங்கள் எந்த மதப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று உணராத குடியிருப்பாளர்களின் விகிதமும் அதிகரித்து வருகிறது.

மதச்சுதந்திரம்

சுவிசின் அரசியலமைப்பு மதச்சுதந்திரத்துக்கு உத்தரவாதமளிக்கிறது. ஓவ்வொருவரும் தமது சொந்த மதத்தை பேணவும் அதைப்பரப்பவும் உரிமையுள்ளது. எவரும் மதத்தில் இணைவதற்கும், மதசெயற்பாடுகளில் பங்கொடுக்கவும் நெருக்கடி கொடுக்கமுடியாது. மக்கள் ஒன்றாகக்கூடி தமது சமய வழிபாடுகளை கொண்டாட முடியும். எவரும் தமது மதம் அல்லது நம்பிக்கையை அவமதிக்கக்கூடாது.

மதமும் பாடசாலையும்.

கட்டாயப்பாடசாலை மதச்சார்பற்றது. அதன் அர்த்தம் சமயப்பாடம் படிப்பிற்பதில்லை என்பதல்ல .சமயப்பாடத்தில் இரு வகையுண்டு. இவையாவன : மதப்பிரிவுள்ள தேவாலய சமயபாடம் மற்றும் பாடசாலைச் சமயப்பாடம் "நன்நெறியும் மதங்களும் " இந்தப் பாடத்தில் அனைத்து மனிதர்களுடன் சம்பந்தப்பட்ட மதமும் நன்நெறியும் பற்றிய கேள்விகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. இது ஆரம்பப்பாடசாலையிலும் 1ம் மேற்பிரிவிலும் கட்டாயப்பாடமாகும். மதப்பிரிவுள்ள தேவாலயச் சமயபாடத்திற்குப் போவது தன்னிச்சையானது. வேறு மதங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்குப் பாடசாலை தவிர்ந்த நேரங்களில் மதச்சமூகங்கள் மூலம் தமது மதங்களைப் படிக்கலாம்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-glarus.ch/ta/canton-glarus/religion

ஓய்வு நேரம்

Glarus மாநிலத்தில் ஓய்வு நேரத்தை களிப்பதற்கு பல கவர்ச்சியான வசதிகள் உள்ளன. இதில் முக்கியாமானவை கழகங்களாகும். இவை வெள;வேறு மனிதர்களை அறிந்துகொள்ள சந்தர்ப்பங்களை வழங்குகின்றன.

கழகங்கள்

Glarus மாநிலத்தில் அதிகமான குடியிருப்பாளர்கள் ஏதோ ஒரு கழகத்தில் (Verein) அங்கத்தவராயிருப்பார்கள்.பல வகைப்பட்ட ரசனைக்கேற்ப அதிக கழகங்கள் உள்ளன. சிறிய கிராமசபைகளில் கூட விளையாட்டு - கலாச்சாரம் மேலும் பல கழகங்கள் உள்ளன. அவை மனிதர் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ள சிறந்த சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றன.அதிகமான கழகங்கள் அனைத்து மக்களுக்காகவும் திறந்துள்ளன. கழகங்கள் பற்றிய தகவல்களை கிராமசபைகளின் இணையத்தளங்களில் தேடலாம்.

இளையவர்களுக்கான வசதிகள்

Glarus மாநிலத்திலுள்ள இளையவர்கள் தமது ஓய்வு நேரத்தைக் கழிக்கவும் தமது வயதையொத்தவர்களுடன் பழகிக் கொள்ளவும் எனப் பல விசேட வசதிகள் உள்ளன. அதிகமான கிராமசபைகளில் ஓய்வு நேரச் சலுகைகளுடன் கூடிய சந்திப்புக்கள் உள்ளன. இங்குள்ள இளையவர்களைப் பராமரித்து அவர்கள் எண்ணங்களைச் சேர்த்து செயற்திட்டமாக்குவார்கள் (Jugendarbeit). இச் சலுகை வழக்கமாக இலவசமானது. இளைஞர் அமைப்புகளில் ஒரே வயதினர் சேர்ந்து தடகள இயற்கை விளையாட்டுக்களில் பங்கெடுப்பார்கள். இதைக் கழகங்கள் கிராமசபைகள் அல்லது தேவாலயங்கள் நடத்தலாம். இந்த சலுகைகள் அனைத்து இளையோருக்கும் உரியது. வதியும் கிராமசபைகளில் மேலதிக விபரங்களை அறியலாம்.

சுற்றுலாவும் கலாச்சாரமும்.

Glarus மாநிலம் பலவிதமான சுற்றுலாவசதிகளையும் பெருமளவு கலாச்சார வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கிறது.கிளாரஸ் மனகரத்தில் பல நீர்வீழ்ச்சி மற்றும் ஏரிகள் உள்ளன. அது தவிர பல அழகிய நடைபயணம்- மற்றும் துவிச்சக்கரவண்டி உலாக்களும் உள்ளன. பிரபலமான சுற்றுலா இடங்கள் எல்ம் (Elm) மற்றும் ப்ரான்வால்ட் (Braunwald). இரண்டு பகுதிகளும் நடைபயணம், நடைபயிற்சி அல்லது குளிர்கால விளையாட்டுகளுக்கு சிறந்த வாய்ப்புகளை வழங்குகின்றன. பல அருங்காட்சியகங்கள் பல்வேறு தலைப்புகளில் கண்காட்சிகளை வழங்குகின்றன. நேஃபெல்ஸில் உள்ள ஃப்ரூலர்பாலஸ்ட் (Freulerpalast) Glarus மாநிலத்தின் வரலாற்றைப் பற்றிய ஒரு நுண்ணறிவை வழங்குகிறது. என்னெண்டாவில் உள்ள அன்னா கோல்டி அருங்காட்சியகம் (Anna Göldi Museum) அன்னா கோல்டியின் வரலாறு மற்றும் பிற தலைப்புகள் பற்றிய சுவாரஸ்யமான நுண்ணறிவுகளையும் வழங்குகிறது.கிளாரஸ் கலை இல்லம் (Kunsthaus Glarus) சுவிட்சர்லாந்து முழுவதும் அறியப்படும். கிளார்னர்லேண்ட் சுற்றுலா (Glarnerland Tourismus) உல்லாசப் பயணங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது. தற்போதைய கலாச்சார நிகழ்வுகள் பற்றிய தகவல்களையும் கிளார்னர் நிகழ்ச்சி நிரலில் (Glarner Agenda) காணலாம்.

விரும்பிவேலைசெய்தல்

விரும்பிவேலைசெய்தல் (Freiwilligenarbeit) என்பது மனிதர்களுக்கும் சூழலுக்கும் இலவசமாக வழங்கும் சமூகரீதியான அர்ப்பணிப்பு. பெருமளவு வேலைகள் சுவிசில் பாரம்பரியமாக விரும்பி வேலை செய்யப்படுகின்றன. பெரும்பாலான வேலைகள் கழகங்களுக்குள் செய்யப்படுகின்றன. இதன்மூலம் கழகங்கள் கலாச்சாரம், விளையாட்டு, சமூக நலன்கள், கல்வி, மிருகங்கள்- மற்றும் சுற்றாடல்பாதுகாப்பு, சுகாதாரம் மறறும் பல வகைகளிலும் ஈடுபடுகின்றன. விரும்பி வேலை செய்பவர்கள் மற்றும் வேலைசெய்யும் சந்தர்ப்பங்கள் பற்றிய தகவல்களை விரும்பி வேலைசெய்யும் விசேடநிலையம் Benevol வில் பெற்றுக்கொள்ளலாம். இடம்பெயர்தல், புகலிடம் மற்றும் அகதிகள் ஆகிய பகுதிகளில் தன்னார்வ பணிகள், மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் தன்னார்வப் பணிகளுக்காக ஒருங்கிணைப்பு அலுவலகங்களால் (träffpunktFRAMI) ஏற்பாடு செய்யப்படுகின்றன.

விளையாட்டு ஃ கலாச்சாரம்ஃகல்வி

நிர்வகிக்கக்கூடிய அளவு இருந்தாலும், Glarus மாநிலம் விளையாட்டு, கலாச்சாரம் மற்றும் கல்விக்கான சொர்க்கமாக உள்ளது: நீங்கள் மற்றவர்களுடன் சேர்ந்து விளையாட விரும்பினால், "இளையவர்களுக்கான வசதிகள்" அத்தியாயத்தில் விளையாட்டுக் கழகங்களுக்கான இணைப்புகளைக் காணலாம். நீங்கள் சுதந்திரமாக விளையாட விரும்பினால், கிளார்னர்லேண்டில் உள்ளும் வெளியிலும் எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளன. உடற்பயிற்சி மையம் முதல் யோகா, பைலேட்ஸ், பார்கோர், மிதிவண்டி பாதைகள் வரை என, வாய்ப்புகள் சிலவற்றைக் குறிப்பிடலாம். சில நிமிடங்களில், ஏரியின் நீர் விளையாட்டுகள் முதல் பனிப்பாறையில் பனி ஏறுதல் வரை உங்கள் இதயம் விரும்பும் அனைத்தையும் அடையலாம். பல்வேறுபட்ட அதிசயிக்கத்தக்க கலாச்சார வாய்ப்புகள் (www.glarneragenda.ch) உள்ளன. பல்கலைக் கழகங்களைத் தவிர,
Kulturlegi உடன் - வருமானம் குறைந்தவர்களுக்கு கிடைக்கும் இந்த அடையாள அட்டையுடன் விளையாட்டு - கலாச்சார - கல்வி நிகழ்ச்சிகளில் குறைந்த செலவில் பங்குபற்றலாம். இந்த அடையாள அட்டைக்கு கரித்தாஸில் விண்ணப்பிக்கலாம். கரித்தாஸ் விண்ணப்பத்தைப் பரிசோதித்த பின்பு முரடவரசடநபi பெறத் தகுதியுள்ளவரா என்பதை அறிவிக்கும்.
நடைமுறையில் அனைத்து மாநிலங்களிலும் கல்வியின் அடிப்படையில் கலந்து கொள்ளலாம்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-glarus.ch/ta/canton-glarus/leisure